**A/L Day Class**
இப்பொழுது
நடைபெறுகின்றன
8-15 — Physics
9-15 — Chemistry
10-30 — Zoology
10-30 — App Maths
11-30 — Botany
11-30 — Pure Maths
**Bond** INSTITUTION
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

A/L DAY CLASS
(வார நாட்களில்)
Physics -
Mr நந்தகுமார் B. Sc
Chemistry -
Mr. Bar B. Sc.
Zoology -
Mr. ஈசன் B. Sc.
Botany -
Mr. கதிர்காமநாதன் B Sc.
Pure Maths.- App Maths
Mr. சந்திரமோகன் B.Sc.
**Bond** INSTITUTION
58A. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு கார்த்திகை மீ 21 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 04 (07-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:-9



சிறை பிடிக்கப்பட்ட சிப்பாய் பண்டாரவை அவரது தங்கை சுசிலா பார்த்து கண்ணீர் மல்கி நிற்பதை முதல் படத்திலும், பண்டாரவை அவரது தாயார் லீலாவதி ஆரத்தழுவி கதறி அழுவதை இரண்டாவது படத்திலும், மற்றைய சிப்பாய் அஜித்சந்திரசிறியை அவரது சகோதரி சுமணு அன்புடன் குசலம் விசாரிப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## நேற்றைய சந்திப்பும் இணக்கம் இன்றி முடிவு

யாழ்ப்பாணம், டிச. 7

நேற்றையசந்திப்பிலும் ஸ்ரீ லங்கா சிப்பாய்களை விடுதலை செய்ய தமிழீழ விடுதலைப் புலிகள் சிறிதளவும் இணங்கவில்லை.

பௌத்த மதகுருமார்கள், சிப்பாய்களின் உறவினர்கள், மக்கள் கட்சி உறுப்பினர்கள் விடுத்த வேண்டுகோள்கள் அனைத்தும் புலிகளினால் நிராகரிக்கப்பட்டன.

பேச்சுவார்த்தையில் 29 பௌத்த மதகுருமார்களும் கலந்து கொண்டனர்.

காலை 9-15 மணி அளவில் ஆரம்பமான பேச்சுவார்த்தை நண்பகல் பன்னிரண்டு மணிவரை நடைபெற்றது.

மனிதாபிமான அடிப்படையில் சிப்பாய்களை தம்முடன் விடுதலை செய்யுமாறு அனைவரும் ஒருமித்து புலிகளிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதனை அடுத்து விஜயகுமாரணதுங்காவும் கிட்டுவும் 15 நிமிட

(4ஆம் பக்கம் பார்க்க

ஊரடங்கு அமுல்

# மட்டக்களப்பில் பெரும் கலவரம்

## 16 தமிழர் 10 முஸ்லிம்கள் இரண்டு நாட்களில் கொலை

— மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர் —

மட்டக்களப்பு, டிசம்பர் 7

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை இரவும் சனிக்கிழமை காலையும் இடம்பெற்ற மூன்று வெவ்வேறு சம்பவங்களில் மொத்தமாக இருபத்தாறு பேர் உயிரிழந்தனர்.

இவர்களில் 16 பேர் தமிழர். 10 பேர் முஸ்லிம்கள். உயிரிழந்த முஸ்லிம்களில் 8 பேர் ஊர்காவல் படையினர்.

இச் சம்பவங்களைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுப் பிற்பகல் 3 மணி தொடக்கம் இன்று காலை வரை ஊரடங்குச் சட்டம் அமுல் நடத்தப்பட்டது.

முதலாவது சம்பவம்

கடந்த வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணத்தில் இருந்து கல்முனை நோக்கிச் சென்ற பஸ் ஒன்று துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்கானது.

களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாம் முன்னால் வைத்து நடந்த இச் சம்பவத்தில் பஸ் கண்டக்டர் உட்பட நான்கு பேர் உயிரிழந்தனர்.

சாரதி உட்பட 5 பேர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த இ. போ.

(4ஆம் பக்கம் பார்க்க)

### இரண்டாவது சம்பவத்தில் 9 பேர் கொலையுண்டார்கள்

காத்தான்குடியில் நேற்று சனிக்கிழமை அதிகாலையில் நடைபெற்ற இரண்டாவது துப்பாக்கிப் பிரயோகத்தில் எட்டு ஊர்காவல் படையினர், ஊர்காவல் படை அதிகாரி ஒருவரின் மனைவி, மகள் ஆகியோர் உயிரிழந்தனர்.

நேற்று அதிகாலை 2-45 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் இரண்டாவது வன்செயல் சம்பவமாகும்.

வாகனம் ஒன்றில் வந்திறங்கிய ஆயுதம் தரித்தவர்கள் காத்தான்குடியில் உள்ள ஊர்காவல் படை அலுவலகம் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அப்போதே இவர்கள் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் பத்தும் நேற்றுமாலை மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டன.

எம். பி. வீடும் தாக்கு

இத்தாக்குதலின் போது ஊர்காவல்படை அலுவலகத்திற்கு அரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மூன்றாவது சம்பவத்தில் இ. போ. ச. ஊழியர்கள் 12 பேர் (தமிழர்) கொலை

நேற்றுக் காலை 4-45 மணியளவில் மட்டக்களப்பில் இருந்து கல்முனை சென்ற இ. போ. ச. பஸ்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இது மூன்றாவது வன்செயல் சம்பவமாகும்.

இதில் பன்னிரண்டு தமிழ் ஊழியர்கள் உயிரிழந்தனர்,

அவர்களின் சடலங்களை காலையில் அகற்ற முடியாததினால் இருந்தது.

நேற்றுமாலை 5 மணியளவில் இச்சடலங்கள் பொலீஸாரால் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டன.

உயிரிழந்தவர்களின் பெயர்கள் வருமாறு:-

1. ஜெயரத்தினம் (சாரதி)
2. கோபாலரத்தினம் (கண்டக்டர்)
3. சின்னத்துரை (கண்டக்டர்)
4. நற்குணம் (மெக்கானிக்)
5. ராஜகோபால் (மெக்கானிக்)
6. ராஜேந்திரன் (மெக்கானிக்)
7. கிருஷ்ணமூர்த்தி (மெக்கானிக்)
8 யோசப் (மெக்கானிக்)
9. யோகராஜா (மெக்கானிக்)
10, யோகநாதன் (மெக்கானிக்)
11. சந்திரலிங்கம் (மெக்கானிக்) (அ-எ-21)

## கல்லடியில் கண்ணி வெடி

மட்டக்களப்பு, டிச 7

மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் இருந்து கல்லடி பொலீஸ் விடுதிக்குச் சென்று கொண்டு இருந்த பொலீஸ் ஜீப் கல்லடிப் பாலத்துக்கு அருகில் சிலிண்டர்கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்கானது

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றது. உயிர்ச் சேதங்கள் இடம் பெறவில்லை. (எ-21)

முச்சந்தி முனி



விஜேயும் அப்ப விடுகிறதில்லை எண்டு தான் நிக்கிறூர் பின்னை... ஏதோ நடக்கிறதைப் பாக்க வேண்டிய காலம் தானே இது...!

விஜே, பௌத்த குருமார் யாழ் விஜயம் பற்றிய தொகுப்பினை 3 ஆம் பக்கத்தில் படியுங்கள்

### சுபநேரம்

07—12—1986
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9 .17 முதல் 10.47 வரை
ராகுகாலம்:
4.47 முதல் 6.17 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

நாளை உதயத்தின் முன்பு திருவெம்பாவை ஆரம்பமாகும்.



நேற்று கச்சேரி பழைய பூங்காவில் நடந்த மாநாட்டில் வவுனியாப் பகுதி மதகுருவான சியம்பலகஸ்வெவ விமலசார தேரர் உரையாற்றுகிறார். அருகில் திரு. விஜயகுமாரணதுங்க அமர்ந்து இருக்கிறார்.

## பிக்குகளும் நேற்று பழைய பூங்கா முகாம் அழைத்துச் செல்லப்பட்டனர்

யாழ்ப்பாணம், டிச. 7

நேற்றுக்காலை 9 மணி அளவில் விஜே குழுவினர் மூன்று வாகனங்களில் பழைய பூங்காவில் உள்ள புலிகளின் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பிக்குகள் ஒரு பெரிய உல்லாச பஸ்ஸிலும் விஜயகுமாரணதுங்க சின்ன மினி வானிலும்; கொழும்பு பத்திரிகையாளர்கள் ஒரு வானிலும் அழைத்துச்செல்லப்பட்டனர்.

பெரு எண்ணிக்கையான மக்கள் வீதியில் இரு மருங்கிலும் நின்று ஆரவாரம் செய்து குழுவினரை வரவேற்றனர்.

9-15-க்கு அலுவலகத்தை அடைந்த விஜே குழுவினரை தளபதி கிட்டு 'ஆயுபோவன்' என சிங்களத்தில் கூறி வரவேற்றார்.

இரு பகுதியினரும் அறிமுகம்செய்து கொண்டனர்.

9-30 மணி அளவில் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் அனைவரும் கூடினர்.

ஒரு மேசையில் கிட்டுவும்; அவரைச் சுற்றி நாயக்கதேரோக்கள் மூவரும் விஜயகுமாரணதுங்கவும் அவரது கட்சி உபதலைவரும்; பத்திரிகையாளரும் அமர்ந்திருந்தனர்.

மற்றும் பிக்குகளும்; மக்கள் கட்சியின் 50 உறுப்பினர்களும்; கைதிகளின் பெற்றோர்களும் உறவினர்களும் சுற்றியிருந்தனர்.

கிட்டு, ரஹீம் உட்பட பல போராளிகள் இடுப்பில் றிவோல்வருடன்

(4ஆம் பக்கம் பார்க்க)

### கிட்டுவுடன் நின்று படம் பிடிப்பதில் ஆர்வம்

யாழ்ப்பாணம், டிச 7

கிட்டுவோடு கிட்ட நின்று படம் பிடிக்க இடம் பிடிப்பதற்காக விஜே குழுவினர் பலர் முண்டியடித்தனர்.

நேற்று புலிகளின் பழைய பூங்கா பிரதான முகாமில் இடம் பெற்ற சந்திப்பின் போது இச்சம்பவம் நடந்தது.

கிட்டுவும் முகம் சுளிக்காது மகிழ்ச்சியோடு படம் பிடித்துக் கொண்டார். (இ-5-10)

### விஜேக்கு விடியோ கஸட்

யாழ்ப்பாணம், டிச.7

விஜய குமாரணதுங்கவுக்கு புலிகள் விடியே கஸட்டுக்களை அன்பளிப்புச் செய்தனர்.

விஜேயின் முதற்கட்ட யாழ்ப்பாண விஜயத்தை அடக்கிய கஸட், கப்டன் கொத்தலாவலை. கேர்ணல் வீரசேகரா மற்றும் பத்து சிப்பாய்கள் ஆகியோர் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை அடங்கிய கஸட், கடந்த இரண்டு நாட்களும் நடந்த சம்பவங்கள் அடங்கிய கஸட் ஆகியவையே விஜேவிடம் கையளிக்கப்பட்டன. (இ-5-10)

### புலிகளின் விடியே படம் பிக்குமார் ரசித்தனர்

யாழ்ப்பாணம், டிச 7

வெள்ளி இரவு சுபாஸ் விடுதியில் பிக்குமாரும் விஜே குழுவினரும் புலிகளின் விடியோ படத்தைப் பார்த்து ரசித்தனர்.

புலிகளின் பயிற்சி இராணுவத் தாக்குதல்கள், புலிகளின் சாகஸங்கள் அடங்கிய வீடியோ படங்களையே அவர்கள் பார்த்தனர். (இ-10)

### விஜே குழுவினர் யாழ் நகரைச் சுற்றிப் பார்த்தனர்

யாழ்ப்பாணம், டிச.7

யாழ் வந்திருந்த விஜே குழுவினர் நேற்று மாலை யாழ்நகரைச் சுற்றிப் பார்வையிட்டனர்

நகரைச் சுற்றிப் பார்க்க விரும்புவதாக பிக்குமார் தெரிவித்ததை ஏற்றுக்கொண்ட கிட்டு இதற்கான ஒழுங்குகளை செய்துகொடுத்தார்.

3 வாகனங்களில் குழுவினர் செல்ல அவர்களுக்குப் பாதுகாப்பாக புலிகள் சென்றனர். (இ-5-10)

### புலிகள் முகாமில் பிரித்

யாழ்ப்பாணம், டிச.7

தமிழீழ விடுதலைப் புலிகளின் பழைய பூங்கா பயிற்சி முகாமில் பௌத்த குருமார்களின் பிரித் ஓதும் வைபவம் நடைபெற்றது

சிறை பிடிக்கப்பட்ட இரண்டு சிப்பாய்களையும் ஆசீர்வதிக்கு முகமாகவே பௌத்த குருமார்கள் பிரித் ஓதினர்.

சிறை பிடிக்கப்பட்ட இரண்டு சிப்பாய்களையும் நேற்றுக்காலைதான் முதல் தடவையாக பௌத்த மதகுருமார்கள் சந்தித்தனர்.

போராளிகள், சிப்பாய்களை பௌத்த மத குருமார்கள் முன்னிலையில் கொண்டு வந்து நிறுத்தினர். உடனே இரண்டு சிப்பாய்களும் மதகுருமார்களை விழுந்து வணங்கினர். (இ-எ)

### ஜெயவேவா கோஷம்

யாழ்ப்பாணம், டிச.7

சிறை பிடிக்கப்பட்ட சிப்பாய்களைப் பார்க்க வெள்ளிக்கிழமை மாலை பழைய பூங்காவுக்கு புறப்பட்ட சமயம் சுபாஸ் விடுதி வாயிலில் மக்கள் "ஜெயவேவா" கோஷம் எழுப்பினர்.

வழி நெடுகிலும் திரண்டிருந்த மக்கள் கையை அசைத்து அவர்களுக்கு தமது உற்சாகத்தைத் தெரிவித்துக் கொண்டனர். (அ-5-10)

### இன்று கொழும்பு பயணம்

யாழ்ப்பாணம், டிச 7

விஜே குழுவினர் இன்று காலை கொழும்பு பயணமாவர்.

நேற்று நண்பகல் பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு உடன் கொழும்பு திரும்புவதாக இருந்தபோதும் அவர்களது வாகனம் ஒன்றில் ஏற்பட்ட பழுது காரணமாயும் சீரற்ற காலநிலை காரணமாயும் பயணம் இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது. (அ-5-10)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் சம்பளக் காசோலை தமிழில்

## அமைச்சு அனுமதி

யாழ்ப்பாணம், டிச 7

அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து தமிழ்ப் பகுதி ஆசிரியர்களுக்கான சம்பளக் காசோலைகளை தமிழில் வழங்க கல்வி அமைச்சு அனுமதி வழங்கி உள்ளது

இது தொடர்பான விண்ணப்பத்தை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த. மகாசிவம் கல்வி அமைச்சுக்கு அனுப்பியிருந்தார்

கல்வி அமைச்சு இது தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிக்கும்படி சகல தமிழ்ப்பகுதி கல்வித் திணைக்களங்களையும் கேட்டிருந்தது.

யாழ் கல்வித்திணைக்கள கல்விப்பணிப்பாளர் மட்டுமே தமிழில் காசோலைகள் வழங்குமாறு பதில் அறிக்கை அனுப்பியிருந்தார்.

இதேபோல் தான் மற்றைய கல்வித் திணைக்களங்களிலும் நிலைமை உள்ளது என ஆசிரியர் சங்கம் எடுத்துக்காட்டியதை தொடர்ந்து கல்வி அமைச்சு இதற்கான அனுமதியை அளித்துள்ளது

இனால் சகல அதிபர்களும் தமது சம்பளப் பட்டியல் விவரங்களை கல்வித்திணைக்களத்திற்கு அனுப்பும்போது தமிழில் தெளிவாக அனுப்ப வேண்டும் என கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார். (இ-5)

மக்கள் முகம்

## செய்திக்கொத்து

### சமண்டலை மர விதை அன்பளிப்பு

பலாலி, டிச.7

மரம் நடும் இயக்கத்தை யாழ் நகரில் முன்னின்று நடத்தும் மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசாவைப் பாராட்டியும், அவரது சேவையை ஊக்குவித்தும் கட்டுவன் புலம் மகாவித்தியாலய மாணவர்கள், பெறுமதி வாய்ந்த மரமாகிய 'சமண்டலை' மரத்தின் விதைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர் (இ-119)

### லயன்ஸ் அன்பளிப்பு

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் பளை அரசினர் வைத்திய சாலைக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்கள் சிலவற்றை அன்பளிப்புச் செய்துள்ளது.

பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து இவற்றை கழகத் தலைவர் டாக்டர் பே. பிலிப்பிடம் இருந்து வைத்தியசாலைப்பொறுப்பாளர் டாக்டர் திரு. குமாரதேவன் பெற்றுக் கொண்டார். (இ-131)

### 50 மாணவருக்கு பாராட்டு விழா

சாவகச்சேரி, டிச.7

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் சாவகச்சேரி கல்வி வட்டாரப் பாடசாலைகளில் ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் திறமைச் சித்திபெற்ற 50 மாணவ, மாணவியரை விழாவெடுத்துக் கௌரவித்துப் பாராட்டியது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் பே. பிலிப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில் லயன்ஸ் மாவட்ட உதவி ஆளுனர் டாக்டர் ஏ. பகீதரன் மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தார் (இ-31)

### மது விற்பனையை நிறுத்தக் கோரி துண்டுப் பிரசுரம்

கல்முனைப் பகுதியில் மதுபான விற்பனை நிறுத்தப்பட வேண்டுமென ஈ பி ஆர்.எல்.எப். துண்டுப் பிரசுரம் மூலம் விற்பனையாளர்களை வலியுறுத்தியுள்ளது. (இ-21)

### மாங்காய் பிடுங்கும் சிப்பாய்கள்

கால் நடையாக ரோந்து செல்லும்படை வீரர்கள் வீதி ஓரங்களில் கொய்யாக்காய், மாங்காய் காணப்பட்டால் அவற்றைப் பிடுங்கி சுவைத்துக் கொண்டு தமது ரோந்து சேவையில் ஈடுபடுகிறார்கள்.

இப்படியான காட்சியை மட்டக்களப்பு நகர சுற்றுடல் வீதிகளில் காணலாம். (இ-21)

# தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் தண்ணீர்ப்பிரச்சினை

பலாலி, டிச. 7

தெல்லிப்பளை வைத்தியசாலையிலும், அதனைச் சேர்ந்த அரச விடுதிகளிலும், தண்ணீர் பற்றுக்குறை நிலவிவருவதால், நோயாளிகளும் வைத்தியசாலையில் கடமைபுரிவோரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இது சம்பந்தமாக உடனடியாக உரிய நடவடிக்கைகள் எடுத்து நிலைமையைச் சீராக்குதல் வேண்டும்.

இவ்வாறு தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

வைத்தியசாலையில் அமர்ந்திருக்கும் உள்ளகத் தொலைத்தொடர்புகள் நீண்டகாலமாக இயங்காமல் இருப்பதால் இது சம்பந்தமாக உடனடி நடவடிக்கை எடுத்து இவைகளை இயங்கச் செய்தல் வேண்டும் என்றும் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளன (இ-119)

### கலந்துரையாடல்

கிளிநொச்சி, டிச.7

கிளிநொச்சி மாவட்ட தேவைகள் பற்றி கலந்துரையாடும் பொருட்டு கிளிநொச்சி கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஒன்றியம், பிரசைகள் குழு, அத்தியாவசிய சேவைகள் குழு, குருகுல நிர்வாகம் ஆகியன ஒன்று கூட்டி நடத்திய கலந்துரையாடலில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. ஜெகா- செந்தில்நாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (இ-76)

### திருமலையில் பாதுகாப்பு தீவிரம்

திருகோணமலைமாவட்டத்தில் தீவிரவாதிகளின் எவ்வித தாக்குதலையும் முறியடிக்கக் கூடிய விதத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-ஐ-எ)

### சங்கானை ஆஸ்பத்திரி அபி-சங்கம்

யாழ்ப்பாணம், டிச. 7

சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியின் அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

பின் வருவோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: டாக்டர், திருமதி. யு. விக்னேஸ்வரன், உபதலைவர்கள்: டாக்டர் எம்.ஏ. இராசரத்தினம், மு. பொ. பொன்னையா, செயலாளர்: திரு வ. திருநாவுக்கரசு, உபசெயலாளர் வா:. கனகராசா பொருளாளர்: திரு.ச சி. சண்முகராசா, உ.பொ. திரு. பொ. சாம்பசிவம், நிர்வாகக்குழு: திரு.க ச கந்தசாமி. டாக்டர். கே. பகீரதன், டாக்டர். யோகநாதன், திரு என். சிவசோதி, திரு. வே. கனகசபாபதி. திரு. சி. வேலுப்பிள்ளை, திரு நா. நாகலிங்கம், திரு ச சிவகுமார், திரு. என். தேவதாஸ். (இ)

### வைக்கிங்ஸ் விளையாட்டுக் கழகம்

யாழ்ப்பாணம், டிச, 7

யாழ்ப்பாணம் வைக்கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் புதியநிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்

போஷகர்; சி குமார், தலைவர்; ஏ ஐ எல். குணநாயகம், அதிபர், (சென் சார்ல்ஸ் மகாவித்தியாலயம்) செயலாளர் பி. ஆர். தம்பிநாயகம், உபதலைவர்கள்: பி சூசைப்பிள்ளை, ஏ என். இராமநாதன், பொருளாளர்: டி. ஐ இறங்கநாயகம், உப செயலாளர்; ரி. ஜே பாலேந்திரா, விளையாட்டுச் செயலாளர்: சி. ஞானசிலன் (இ-எ)

### சிப்பாய்களுக்கு தமிழ் படிப்பிக்கும் முஸ்லிம் ஆசிரியர்கள்

கொழும்பு, டிச.7

மலையக இராணுவ முகாம்களில் உள்ள சிப்பாய்களுக்கு தமிழ் படிப்பிக்க இளைப்பாறிய முஸ்லிம் ஆசிரியர்களை பாதுகாப்பு அமைச்சு தெரிவு செய்துள்ளது.

தமிழைப் படித்த பின்னர் இச்சிப்பாய்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று தெரியவருகிறது. (இ-ஐ-எ)

### சிறுவர் பாடசாலை பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், டிச. 7

மாவிட்டபுரம் நவீன ஈஸ்வரி சிறுவர் பாடசாலையின் பரிசளிப்பு கலைவிழா இன்று ஞாயிறு காலை வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

பிரம்மஸ்ரீ து. சுந்தரமூர்த்தி ஐயர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு யாழ். கல்விப்பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்,

திரு. பி சிவஞானசுந்தரம், திரு. ம சிவராஜா சிறப்பு விருந்தினராக கலந்துகொள்வர். (இ-5)

### கவின்கலை அரங்க நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், டிச, 7

தமிழர் கலாசார அவையினரின் இவ்வார கவின்கலை அரங்க நிகழ்ச்சிகள் இன்று ஞாயிறு பி. ப 3-30 மணிக்கு வின்ஸர் கலையரங்கில் நடைபெறும்.

காங்கேசன்துறை வசந்தகான சபாவினர் வழங்கும் நடிகமணி வி. வி வைரமுத்துவின் அரிச்சந்திர மயான காண்ட நாடகம் மேடையேற்றப்படும் (இ-5)

# குழந்தைகள் கல்வியில் தாய்மார் பங்கு முக்கியமானது

## பரிசளிப்பு விழாவில் உரை

வேலணை டிச. 7

ஒரு நாட்டின் செல்வங்கள் குழந்தைகள் குழந்தைகள் கல்வி அறிவுள்ளவர்களாக விளங்கினால்தான் நாடு உயர்ச்சியடையும். குழந்தைகளின் கல்வியில் தாய்மாரின் பங்கு முக்கியமானது.

அறவழிப் போராட்டக் குழுவினால் நடத்தப்படும் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி பரிசளிப்புவிழாவில் தலைமை வகித்து உரையாற்றிய திருமதி. தி பத்மாவதி மேற்கண்டவாறு கூறினார்

அறவழிப் போராட்டக் குழுவைச் சேர்ந்த திருமதி. தி பத்மாவதி தொடர்ந்து உரையாற்றுகையில் அன்பாகவும், பண்பாகவும் அமுது ஊட்டுவது போல் ஆசிரியர்கள் கல்வி அறிவை ஊட்ட வேண்டும் என்றார்.

இளைப்பாறிய ஆசிரியர் திரு. எஸ். கனகரெத்தினம் சிறுவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். (இ - 167)

## புலிகள் அறிக்கை

# பரீட்சைக்கு இடையூறு வேண்டாம்

யாழ்ப்பாணம், டிச. 7

தற்பொழுது நடைபெற்றுவரும் க. பொ. த. சாதாரணதர பரீட்சைக்கு எவரும் எவ்வித இடையூறும் விளைவிக்கக் கூடாதுஎன தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இன்றைய நிலையில் கல்வியைத் தொடர பல்வேறுஇடையூறுகளிருப்பினும் சகல மாணவச் செல்வங்களும் அதீத அக்கறை செலுத்தி கல்வியை ஒழுங்குடன் தொடரவேண்டும்.

இவ்வருடம் பல்வேறு இராணுவ நெருக்கடிகள் காரணமாக பாடசாலை நாட்கள் குறைவாக இருந்தன, பல பாடசாலைகள் இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு நெருக்கடிகள் மத்தியிலும் மாணவர்கள் கல்வியிலும் அக்கறை செலுத்தி கல்வி கற்றுவருகிறார்கள். இந்நிலையில் பரீட்சையைக் குழப்பக் கூடாது -- என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### சுவரொட்டிகளைக் கிழிக்க வைத்த சிப்பாய்கள்

மட்டக்களப்பு, டிச 7

''நீங்கள் ஒட்டும் சுவரொட்டிகளை நீங்கள் தான் கிழிக்க வேண்டும்''

மேற்கண்டவாறு மட்டக்களப்பு நகரில் வீதியால் சென்ற பொது மக்களை படையினர் பணித்தனர்.

தமிழீழ விடுதலை புலிகளால் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை படையினர் பொது மக்கள் மூலம் அகற்றிய போதே இதனைத் தெரிவித்தனர். (இ - 21)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

தம் பிள்ளைகளின் நலன் கருதி:

# பெற்றோர் ஆசிரியர்களுடன் தொடர்பு வைக்க வேண்டும்

## புனித மரியாள் பரிசளிப்பு விழாவில் பணிப்பாளர்

யாழ்ப்பாணம் டிச 7

தமது பிள்ளைகளின் முன்னேற்றத்தை அவதானித்து பெற்றோர் ஆசிரியர்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டால்தான் பிள்ளைகள் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பயந்து கல்வியில் அக்கறை கொள்வார்கள்.

இவ்வாறு யாழ் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் கூறினார்.

யாழ் புனித மரியாள் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

அவர் மேலும் பேசுகையில்; யாழ்ப்பாண மாணவர்கள் இன்று எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் கல்வியைப் பெற வேண்டி உள்ளது.

மூட்டைப்பூச்சி தனக்கு கிடைக்கக்கூடிய குருதியை உறிஞ்சிவைத்து, பின் தனது தேவைகளை பூர்த்தி செய்வதுபோல் எமது சிறார்களும் தமக்குக் கிடைக்கும் சிறிய வாய்ப்பைச் சேமித்துப் பயன்படுத்தி தமது கல்வியை மேம்படுத்த வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

விழாவிற்கு தலைமை வகித்த கல்லூரி அதிபர் திரு. வெ. வில்லியம் தமது ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில்; வித்தியாலயம் பல துறைகளில் முன்னணியில் நிற்கிறது என்றார்.

மாணவர்கள் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்குகிறார்கள் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாண கல்வியதிகாரி திரு. இ. சிவானந்தன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்.

கலை நிகழ்ச்சிகளையும் விழாவையும் உபஅதிபர் திரு சி தார்சிசியஸ் ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்தியிருந்தார்.

திரு நா. திருச்செல்வம் நன்றியுரை வழங்கினார் (இ - 5)

# தமயந்திக்கு பாராட்டு

ஊர்காவற்றுறை, டிச.7

புகைப்படக் கலையை நவீன யுக்திகளோடு கையாண்டு, அதன் மூலம் எமது சமூக, பொருளாதார, அரசியல் விழுமியங்களை தத்ரூபமாகக் காட்ட முனைந்துள்ள கலைஞர் தமயந்தி பாராட்டப்பட வேண்டியவர். சிறந்த கலைஞரான இவரது இப்புதிய கலைவடிவத்தை எமது மக்கள் ஏற்றுக் கொண்டு அவருக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

காவலூர் இலக்கிய வட்டத்தின் செயலாளர் திரு. தவபாலன் இவ்வாறு தெரிவித்தார்.

இலக்கிய வட்டத்தின் தலைவரும் அதிபருமான திரு. ஆ. சபாரத்தினம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது

திரு. தவபாலன் தொடர்ந்து பேசுகையில் ''கவிஞர் தமயந்தி புகைப்பட வீடியோ கலைகளில் நவீன யுக்திகளைக் கையாண்டு அதன்மூலம் பணம் சம்பாதிக்க முனையாமல், எமது சமூகத்திற்காக சேவை செய்து வருகின்றார் என்றார் (இ - 16)

## பாலைமீன் மடுவில்

# இறந்த ஐவரும் பொதுமக்கள்

மட்டக்களப்பு, டிசம்பர் 7

மட்டக்களப்பு, பாலைமீன்மடுவில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்த ஐந்து தமிழர்களும் பொதுமக்கள் என்று மட்டக்களப்பு பிரசைகள் குழு, இராணுவ இணைப்பு அதிகாரியிடம் முறையிட்டுள்ளது.

தேடுதலின் போது படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இவர்கள் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களின் பெயர்கள் வருமாறு: கே. தங்கராசா, வயது 28, மினிபஸ் சாரதி, கே ஜெயம், வயது 16, செல்வம், வயது 19, யேசுதாஸன், 36 வயது, வே. றிச்சர்ட், 18 வயது. (இ-எ-21)

# யாழ்ப்பாணத்தில் தயாராகவிருக்கும் புதிய திரைப்படம்

யாழ்ப்பாணம், டிச.7

நீண்ட இடைவெளிகளுக்குப்பின் யாழ்ப்பாணத்தில் ஓர் தமிழ்த் திரைப்படம் தயாராக உள்ளது

ஸ்ருடியோ வீனஸ் வழங்கும் 'கலைந்த ராகங்கள்' திரைப்பட ஆரம்ப விழா எதிர்வரும் 12ஆம் திகதி ஆனைக்கோட்டை வீனஸ் இல்லத்தில் ஆணையாளர் திரு. சி வி. கே. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேடை- வானொலி- திரைப்பட கலைஞர்களான வை. சிவபாலன், எஸ். செல்வராசா, சி. க. முருகேசன், செல்வி யாழினி பரமசாமி, குமுதினி பரமசாமி உட்பட பல முன்னணி நடிகநடிகைகள் நடிக்கவுள்ளனர்.

பல தமிழ், சிங்கள திரைப்படங்களுக்கு ஒளிப்பதிவாளராக கடமையாற்றிய திரு. வி. சிவசுப்பிரமணியம், வீனஸ் ஸ்ருடியோ வீடியோ படப்பிடிப்பாளர் திரு வேதநாயகம், திரு. குமரேசன் ஆகியோர் கமரா டைரக்ஷன் பொறுப்புக்களை ஏற்றுள்ளனர்.

இன்றைய சூழ்நிலைகளையும்; என்றும் முடிவு காணவேண்டிய பிரச்சினைகளையும் மையமாகக் கொண்ட கதை அம்சத்தைக் கொண்ட ஒரு திரைப்படமாக இது அமையுமென இதன் முழுப் பொறுப்புக்களையும் ஏற்றுள்ள நடிகர் திரு. வை. சிவபாலன் கூறினார். (அ-5)

# வடமராட்சி முகாம்களுக்கு அதிரடிப் படையினர்

வல்வெட்டித்துறை, டிச. 7

வடமராட்சி இராணுவ முகாம்களுக்குப் பயிற்சி பெற்ற அதிரடிப் படையினர் ஹெலிக்கொப்டர்கள் மூலம் கொண்டு வந்து இறக்கப்படுகின்றனர்.

அண்மையில் பலாலி இராணுவ முகாமிற்கு வந்துசேர்ந்த பெருந் தொகையான அதிரடிப் படைச் சிப்பாய்களே வடமராட்சியில் உள்ள இராணுவ முகாம்களுக்கு ஹெலிக்கொப்டர் மூலம் கொண்டு வரப்படுகின்றனர்.

வடமராட்சிப் பகுதி அதிரடிப் படைக்குத் தலைமை வகிப்பவர் வல்வைப் பொலீஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரியாக [illegible] என்று [illegible] இறது. (அ-160)

# சுன்னாகத்தில் இன்று நடைபெறும் விழா

யாழ்ப்பாணம் டிச. 7

சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் பல்கலைக்கழக மாணவருக்கு புலமைப் பரிசில் வழங்குவதும்; புனருத்தாரண நிதியம் ஒன்றை ஆரம்பிப்பதுமான விழா நிகழ்ச்சிகள் இன்று ஞாயிறு காலை சங்க கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவர் திரு. சி. குமாரவேல் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ் அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சங்க தொழிற்பரப்பி [illegible] பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு [illegible] வசதி குறைந்த மூன்று மாணவர்களுக்கான நிதி உதவியை யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் வழங்குவார்,

பல்வேறு பட்ட பாதிப்புற்றமக்களுக்கும் பொது ஸ்தாபனங்களுக்கும் உதவு முகமாக ஆரம்பிக்கப்படவுள்ள புனருத்தாரண நிதியத்தை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியிடம் முதல் நிதியைப் பெற்று அரச அதிபர் ஆரம்பித்து வைப்பார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிவதர்ம வள்ளல் க. கனகராசா உட்பட பல பிரமுகர்கள் ஆசியுரை வழங்குவர் (இ-5


1986ஆம் ஆண்டு யாழ் மாவட்ட அரச மரவேலைப் பாடசாலைகளின் ஒரு வருட மரவேலைப் பயிற்சிக்கு

**பயிலுநர்களைச் சேர்த்தல்**

சிறு கைத்தொழில் திணைக்களத்தினால் நடத்தப்படும் யாழ்ப்பாணம், மானிப்பாய், சுன்னாகம் இயந்திர மரவேலைப் பாடசாலைகளுக்கு மேற்சொல்லப்பட்ட பயிற்சிக்காக ஆண் - பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலும் விபரங்களுக்கு அண்மையில் உள்ள மரவேலைப் பாடசாலை பொறுப்பதிகாரியையேனும் அல்லது சிறு கைத்தொழில் உதவிப் பணிப்பாளர், கச்சேரி, யாழ்ப்பாணத்திலோ நேரடியாகவோ கடித மூலமாகவோ தொடர்புகொள்ளவும். பயிற்சிக் காலத்தில் உதவிப்பணம் வழங்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி: 24-12-1986.

சீ. ஆர். வேலாயுதபிள்ளை
உதவிப் பணிப்பாளர்,
சிறுகைத்தொழில் பகுதி,
கச்சேரி, யாழ்ப்பாணம்.



நத்தார் புது வருடவிசேஷ வாய்ப்பு

**மாபெரும் மலிவு விற்பனை**

டிசெம்பர் மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை

★ ஆண்கள் ★ பெண்கள்
★ சிறுவர்களுக்கு

உகந்த சிறந்த துணிவகைகளுக்கும்
தைக்கப்பட்ட உடைகளுக்கும்
மற்றும்
லேடன் தயாரிப்புகளுக்கும்
உடன் நாடுங்கள்

**லேடன் காமென்ஸ்**

235, ஆஸ்பத்திரி வீதி,
(சத்திரச் சந்தி அருகாமையில்)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23603


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

கண்கள் ஒன்று சொல்ல நாவொன்று சொல்லின் விடயம் அறிந்தவன் கண்களையே நம்புவான்.

...பைபிள்

உதயன்

இல.15 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805 / 22073
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம் 07-12-1986 த.பெ. இல.23

## தூதுவர்களாக மாறி சரித்திரத்தில் இடம் பிடியுங்கள்

தென்னிலங்கையின் இளம் அரசியல் தலைவர் திரு. விஜய குமாரணதுங்கா இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணம் வந்திருக்கிறார் அவருடன் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பௌத்த குருமார்களும், 40 சிங்களப் பொதுமக்கள் பத்திரிகையாளர்களும் நீண்ட கால இடைவெளியின் பின்னர் யாழ்ப்பாண மண்ணைத் தரிசிக்க வந்திருக்கிறார்கள் தமது விஜயத்தை நல்லெண்ண விஜயம் என்று தெரிவித்திருக்கிறார்கள். மிகவும் நல்லது.

1983 ஆம் ஆண்டு ஜூலையில் நடந்த மிகப் பெரிய இனக்கலவரத்தின் பின்னர், இத்தனை பெரும் எண்ணிக்கையான சிங்கள மக்கள் வடபகுதி வந்திருப்பது இதுவே முதற் தடவையாகும்.

கடந்த மூன்று வருடங்களாக தமிழ் மக்கள் அரச பயங்கர வாதத்தின் அக்கிரமத்துக்கு ஆளாகி வருகின்றார்கள். பல்லாயிரக் கணக்கானவர் அநியாயமாகக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். போராளிகள் மட்டும் அன்றி அப்பாவிப் பொதுமக்களும் தமிழரின் உரிமைக்காகத் தமது உயிர்களை அர்ப்பணித்து விட்டார்கள். எஞ்சி இருப்பவர்களும் மரணத்தின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எங்கு, எப்போது உயிர் பறிக்கப்படுமோ என்ற நிச்சயமற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், உயிர் பறிபோனாலும் உரிமை பறிபோக, சுதந்திரம் பறிபோக விடமாட்டோம் என்ற மன உறுதியுடன் வாழ்கிறார்கள்

யாழ்ப்பாணம் வந்த விஜே குழுவினர் ஒரு வாரமாவது தங்கி, தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளையும் சொந்த மண்ணிலேயே அவர்கள் அகதிகளாக மாறி அவலப்படுவதையும் நேரில் பார்க்க வேண்டும். இரண்டு மூன்று நாள் விஜயம் போதாது

அப்போதுதான் அரசியல்வாதிகள் தங்கள் அதிகாரத்தைப் பாவித்து, அரசியல் அடம்பிடிப்பால் தமிழர்களையும், ஆயுதப்படையினர் என்ற போர்வை போர்த்திச் சிங்கள மக்களையும் பலி கொள்கிறார்கள் என்பது தெரியும்.

சிங்களவர்களைப் போலவே தமிழர்களும் மனிதர்கள். சிங்கள மக்கள் அனுபவிக்கத் தகுதியான அத்தனை உரிமைகளையும் தமிழ் மக்களும் அனுபவிக்கத் தகுதியுடையவர்கள்,

ஒருவரை மற்றவர் அடக்கி ஆளாமல், அவரவர்களுக்கு உரிய பிறப்புரிமைகளை அனுபவித்துச் சகோதரர்களாக வாழ வழி செய்வது அவசியம். இதனை மனதிற்கொண்டு பிரச்சினையை அணுகினால் அதனைச் சுமுகமாகவும் அமைதியாகவும் விரைந்து தீர்த்துவிடலாம்.

இந்தச் சின்னவிடயத்தை அரசு புரிந்து கொண்டு, மனிதாபிமான முறையில் பிரச்சினையைத் தீர்க்க விருப்பம் கொண்டால் ஒரு வாரத்தில் நல்ல முடிவு கிடைத்து விடும். பேச்சுவார்த்தை என்றும் இராணுவ நடவடிக்கை என்றும் இழுத்தடிக்க வேண்டிய அவசியம் இராது.

தமிழர்கள் மனிதாபிமானம் மிக்கவர்கள். அவர்கள் பயங்கரவாதிகள் அல்லர். உயிரை மதிக்கும் உணர்வு உள்ளவர்கள் என்பதை விடுதலைப் புலிகள் மன்னார்ச் சண்டையைத் தொடர்ந்து நிரூபித்து விட்டார்கள்.

சிப்பாய்களின் சடலங்களை இராணுவத்திடம் ஒப்படைத்தமை, இராணுவ அதிகாரிகளுடன்பேச்சு நடத்தியமை, விஜே குழுவினரை வரவேற்று — பௌத்த குருமாரை வரவேற்று, சிங்கள மக்களை வரவேற்று அவர்களுடன் பேசியமை ஆகியவை தமிழர் போராட்ட வரலாற்றில் பெரும் திருப்பு முனைகள்.

போராளிகளும், தமிழர்களும் உரிமைப் போராட்டம் நடத்துகிறார்களே அன்றி உயிர் குடிக்கும் அல்லது இனத்தை அழிக்கும் போராட்டம் நடத்தவில்லை என்பதை இப்போது யாழ்ப்பாணம் வந்திருக்கும் பௌத்த குருமார்களும், சிங்களப் பொது மக்களும் உணர்ந்திருப்பார்கள் என நம்புகின்றோம்.

இங்கு ஒன்றும், அங்கு மற்ற ஒன்றும் கூறாமல், திரு. குமாரணதுங்காவுடன் சேர்ந்து பௌத்த குருமார்களும் தென்னிலங்கை மக்களுக்கு நிலைமையைப் புரிய வைக்க வேண்டும். பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணுமாறு அரச உயர் மட்டத்திடம் இடித்துரைக்க வேண்டும். நல்லெண்ண விஜயம் மேற்கொண்டவர்களாக மட்டுமன்றி தமிழர்களின் தூதர்களாகவும் விளங்குவது உகந்ததாகும்.

இங்கு வந்திருப்பவர்கள் தங்கள் தூது முயற்சியில் வெற்றிகாண வேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பம். அந்த விருப்பத்தை அவர்கள் நிறைவேற்றினால் சரித்திரத்தில் அவர்களுக்கும் இடம் கிடைக்கும்.

## ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையம்

மானிப்பாய், டிச. 7

உடுவில் கிழக்கு, மல்வம், புதுமடம் ஆகிய பிரிவுகளை உள்ளடக்கிய ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையம் ஒன்று உடுவில் கிறிஸ்தவ இளைஞர் சங்க மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது

மாவட்ட அபிவிருத்திச்சபை உடுவில் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. இ. கணேஸ்வரன் தலைமையில் அங்குரார்ப்பண வைபவம் நடைபெற்றது.

உடுவில் பொதுச் சுகாதார பரிசோதகர் திரு. க தங்கவேலாயுதம், உடுவில் கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தலைவர் திரு. செ குமாரசாமி உடுவில் பகுதி குடும்பநல உத்தியோகத்தர் திருமதி கே. மனோகரன் ஆகியோர் அங்கு உரையாற்றினர்.

## அருணாச்சலுக்கு மாநில அந்தஸ்து
### லோகசபையில் சட்ட மூலம்

அருணாச்சல் டிச. 6

இந்தியாவின் வட கிழக்குப் பகுதியில் உள்ள அருணாச்சல், மாநிலமாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது.

இது தொடர்பான இரு சட்ட மூலங்களை இந்திய உள்துறை அமைச்சர் பூட்டாசிங் வெள்ளிக்கிழமை லோக சபையில் சமர்ப்பித்தார்.

ஒரு சட்ட மூலம் அருணாச்சல் பிரதேசத்தை மாநிலமாகப் பிரகடனப் படுத்துகிறது.

மற்றைய சட்ட மூலம் 40 அங்கத்தவர்களைக் கொண்ட சட்டசபை ஒன்றை ஏற்படுத்துவதற்கு வழி வகுக்கிறது

இதுவரை அருணாச்சல் பிரதேசம் மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள யூனியன் பிரதேசமாக இருந்து வந்தது.

யூனியன் பிரதேச சட்ட சபை உறுப்பினர் எண்ணிக்கை 30 மட்டுமே

மாநிலமாக இது பிரகடனப்படுத்தப்பட்டதை அடுத்து உறுப்பினர் எண்ணிக்கை 40 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. (இ)

## வெளி உலகில்

### அமெரிக்கா மீது அரபு லீக் கண்டனம்

ரியூனிஸ், டிச.6

அமெரிக்கா ஈரானுக்கு ஆயுதங்கள் விற்றசெயலை அரபு லீக் கண்டித்திருக்கிறது.

அரபு லீக்கின் செயலாளர் நாயகம் செட்லி கிலிபி ஆயுத விற்பனை பற்றி தெரிவிக்கையில் இச்செயல் வளைகுடா யுத்தத்தை நீடிக்கச் செய்யும். அமெரிக்காவின் இச்செயலுக்கும் சிரியா மீது தடை விதிக்கப்பட்டதற்கும் எப்படி தொடர்பு காணப்பட முடியும்? என்று கேட்டார்.

அரபு லீக் நாடுகளின் உள்துறை அமைச்சர்கள் மாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் செயலாளர் நாயகம் இக் கேள்வியை எழுப்பினர். (இ-எ)

வளர்முக நாடுகள்மீதான

## பொருளாதார நிர்ப்பந்தத்துக்கு எதிராக ஐ.நா தீர்மானம்

ஐ. நா டிச. 6

வளர்முக நாடுகளுக்கு எதிராக அபிவிருத்தி அடைந்த நாடுகள் மேற்கொள்ளும் பொருளாதார நெருக்குதல்களைக் கண்டித்து ஐ. நா. பொதுச்சபை தீர்மானம் நிறைவேற்றி உள்ளது

இந்தியா உட்பட 115 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன.

அமெரிக்கா பிரிட்டன் மேற்கு ஜேர்மனி, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தன.

நிக்கரகுவாவுக்கு எதிரான வர்த்தகத் தடையை நீக்குப்படியும் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது

அபிவிருத்தி அடைந்த நாடுகள் வளர்முக நாடுகள் மீது அரசியல் கட்டாயத்துக்காகப் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்துகின்றன என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. (இ)

### ராஜீவிடம் சமாதான ஒளிப்பந்தம்!

சென்னை, டிசம்பர் 7

தமிழ் நாட்டில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட சமாதான ஒளிப்பந்தம் 3000கிலோ மீற்றர் தூரம் பயணத்தின் பின்னர் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் கையளிக்கப்பட்டது.

இந்த ஒளிப்பந்தம் சடந்த 20 ஆம் திகதி தமிழ் நாட்டின் தருமபுரி மாவட்டத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டது.

உலகில் படைக்குறைப்பு, சமாதானத்தை வலியுறுத்து முகமாகவே இது எடுத்துச் செல்லப்பட்டது. (இ)

### மண்டேலாவுக்கு சமாதானப் பரிசு

ஸ்டொக்ஹோம், டிச.6

சிறைவாசம் அனுபவிக்கும் தென் ஆபிரிக்க கறுப்பு இனத்தலைவர் நெல்ஸன் மண்டேலாவிற்கு சுவீடிஷ் தொழிற் சங்கம் ஒன்று, இந்த ஆண்டிற்கான சுதந்திர சமாதானபரிசை வழங்கியுள்ளது.

பரிசளிப்புவிழா சனிக்கிழமை நடைபெற்றது.

அண்மையில் கொலை செய்யப்பட்ட சுவீடிஷ் பிரதமரின் மனைவி திருமதி உலோப் பாமே திரு. மண்டேலாவின் பிரதிநிதியிடம் பரிசைக் கையளிப்பார். (இ-எ)

## யாழ் வருகை மூலம் சரித்திரம் படைத்த பௌத்த மத குருமார்

—அலுவலக செய்தியாளர் க. இரத்தினராஜசிங்கம்—

**ஸ்ரீலங்கா மக்கள் கட்சிப் பொதுச்செயலாளர் விஜே குமாரணதுங்க குழுவினரின் யாழ் வருகை தொடர்பாக எமது அலுவலக செய்தியாளர் நேரடியாக சென்று உரையாடி திரட்டிய தகவல்கள்**

வெள்ளிக்கிழமை மாலை 4 மணி 50நிமிடம். யாழ்-விக்ரோறியா வீதியில் சனம் திரளுகிறது.

புலிகள் ஆயுதங்களுடன் ஆங்காங்கே நடமாடுகின்றனர்

திடீர் என பரபரப்பு, சலசலப்பு. பலாலி வீதியால் வந்து விக்ரோறியா வீதிக்கு திரும்புகிறது புலிகளின் கவச வாகனம்

விஜே வந்துவிட்டார், பிக்குகள் வந்து விட்டனர்.

அவர்களைப் பார்க்க வந்த மக்கள் மத்தியில் பரபரப்பு.

புலிகளின் கவசவாகனத்தை அடுத்து விஜேயும் அவரது கட்சிப் பிரமுகர்களும் வந்து கொண்டிருந்த ஹைஏஸ் வான் சுபாஸ் விடுதிக்குள் நுழைகிறது.

அதனை அடுத்து பெரிய பஸ் ஒன்றில் பிக்குகள்

இரு சிப்பாய்களின் குடும்பத்தவர்கள், பத்திரிகையாளர்கள் வருகிறார்கள்.

யாழ்ப்பாண வரலாற்றில் எத்தனையோ திருப்பங்கள்.

விஜே குழுவினரையும், பௌத்த பிக்குகளையும் ஜொனி கைலாகு கொடுத்து வரவேற்கின்றார்.

நகரின் மத்தியில் அயர்ந்து போய் இருந்த ஹோட்டல் சுபாஸ் சுறுசுறுப்படைகிறது

கேற்றுக்கு வெளியே மக்கள் கூட்டம்.

கொழும்பு பத்திரிகையாளர்கள், வெளிநாட்டு செய்தி முகவர்கள், புகைப்படக்காரர்கள் புடை சூழ விஜேயும், பிக்குமாரும் சிப்பாய்களின் உறவினர்களும் (கலங்கிய கண்களுடன்) சுபாஸின் மேல் மாடிக்கு வந்து கொண்டிருந்தனர். வந்த சகலருக்கும் புத்தீர சுடச்சுட மட்டன் ரோல்கள், கேக், பிஸ்கட், தேநீர் பரிமாறப்படுகின்றன.

### அஜித்தின் சகோதரி

அழுத கண்களுடன் அங்கு ஒரு மேசையருகில் அமர்ந்திருந்த பெண்மணியிடம் சென்றேன்.

அவர் தான் அஜித் சந்திரசிறியின் சகோதரி சுமனா சந்திரசிறி.

அவரருகில் தகப்பனார் சுபசேன, சகோதரன் நிஹால் சந்திரசிறி, சிறிய தாயார் ஆரியவதி அஜித்தின் உயிர் நண்பன் நீல் ரஞ்சன் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

முதலில் அஜித் சந்திரசிறியின் தகப்பனார் சுபசேன சொல்கிறார்.

"எனக்குஎட்டுப்பிள்ளைகள் அஜித் தான் கடைசிப் பிள்ளை.

வீட்டின் வறுமை நிலை காரணமாக அவன் இராணுவத்தில் சேர விண்ணப்பித்தான்.

வட பகுதியில் நடைபெறும் கண்ணிவெடி. நேரடி மோதல் என்பவற்றினால் பயந்து இராணுவத்தில் சேரவேண்டாம் எனக் கூறினேன். அவன் கேட்கவில்லை.

இப்படி அஜித்தின் தகப்பனார் கூறினார்.

சிப்பாய்களை விடுவிக்க அரசு தயங்கினால்? என்று கேட்டபோது.

ஆண்டவனுக்கு மேலே ஒரு சக்தி இல்லை. நாம் ஆண்டவனையே நம்பி இருக்கிறோம் என்று பதில் அளித்தார் அவர்

விடுதலைப் புலிகள் பற்றி அவரிடம் கேட்ட போது என்னுடைய மகனுக்கு இப்பொழுது தமிழ் இரத்தமே ஓடுகிறது. அவனுக்கு உயிர் கொடுத்த தமிழ்ப் போராளிகளுக்கு பிராயச்சித்தமாக எனது உயிரையும் கொடுக்கத் தயாராக உள்ளேன்.

புலிகளால் எனது மகன் பிடித்து வைக்கப்பட்டுள்ள போதிலும் மாதாமாதம் அவரது சம்பளம் அரசினால் எமக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

எனது மகன் சிறை வைக்கப்பட்ட சம்பவம் குறித்து அரச அதிகாரிகளிடம் விசாரித்தால் "உங்கள் பிள்ளை வீட்டுக்கு வந்து சேருவான். பொறுத்திருங்கள்" எனப் பதில் கூறுகிறார்கள்

### பிரேதப்பெட்டி

எனது மகன் இறந்து போனதாகக் கூறி எங்களிடம் ஒரு பிரேதப் பெட்டியைக் கொண்டு வந்து தந்தார்கள்.

பெட்டியைத் திறந்து பார்க்கக்கூட அரசு அனுமதி அளிக்கவில்லை பெட்டி சீல் பண்ணப்பட்டிருந்தது.

சமயாசார முறைப்படி எனது மகனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்தேன்.

எனினும் பின்னர் தான் தெரியவந்தது, எனது மகன் சாகவில்லை உயிருடன் இருக்கிறான் என்று.

மரணச் சடங்குகளுக்கு மட்டும் அதற்குள் 15,000 ரூபா செலவாகி இருந்தது.

இதற்காக அரசு ஐந்து சதம் கூடத் தரவில்லை.

உங்கள் மகனை மீண்டும் இராணுவத்தில் சேர்ப்பீர்களா? எனக் கேட்டபோது

ஐயா! நாங்கள் பிச்சை எடுத்தாலும் பரவாயில்லை இராணுவத்தில் மீண்டும் சேர்க்க மாட்டோம். என் மகனை விட்டால் போதும்.

இப்படி அவர் சொன்னார்

### பண்டாரவின் தாயார்

அடுத்தபடியாக பண்டாராவின் தாயார் பக்கம் திரும்பினேன்.

ஆழ்ந்த சிந்தனையில் சுபாஸ் விடுதியில் நடக்கும் சம்பவங்களை உற்று நோக்கிக் கொண்டிருந்தார்.

பண்டாராவின் தாயார் லீலாவதி அவரைச்சுற்றி பண்டாரவின் சகோதரன் தர்மகீர்த்தி, சகோதரி சுசிலா, மாமனார் மேர்லின் மு. சில்வா ஆகியோர் இருந்தனர்.

பண்டாராவின் தகப்பனார் ஏற்கனவே இறந்து விட்டார்.

தாயாரை அண்மித்த நான் உங்கள் மகனை விடுதலை செய்ய என்ன நடவடிக்கைகளை எடுத்தீர்கள்என்றுகேட்டேன்

எம்மிடம் அரசை எதிர்ப்பதற்கு எதுவித சக்தியுமில்லை. புலிகளுக்கு மட்டும் கடிதம் எழுதினோம். ஒன்றுக்கும் பிரயோசனம் இல்லை.

மகனின் நினைவு காரணமாக பல நாட்கள் சாப்பிடாமல் பட்டினி கிடந்தேன்.

இராணுவத்தில் சேர்ந்தால் அதிக சம்பளம் பெறலாம் என அரசு பல இளைஞர்களுக்கு ஆசை காட்டியது.

இதை அடுத்தே எனது மகனும் இராணுவத்தில் சேர்ந்தான்,

கடந்த 9 மாதங்களாக யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய அவன் பின் மன்னாருக்கு மாற்றப்பட்டான்.

யாழ்ப்பாணத்தில் இருக்கும்போது கூட தனக்கு எதுவித பயமுமில்லை. தான் சந்தோஷமாக இருப்பதாக எனக்குக் கடிதம் எழுதுவான்.

அவனின் கடிதத்தால் தான் இன்று பயம் இல்லாமல் விஜேயுடன் யாழ். புறப்பட்டோம்

புலிகளின் சிறையில் இருக்கும்போது மகனின் கடிதம் எனக்குக் கிடைத்தது

தங்களுடைய ஒரே குடும்பம் மாதிரி எம்மைப் புலிகள் பாதுகாக்கிறார்கள் யாரும் பயப்பட வேண்டாம் என்று கடிதம் எழுதப்பட்டிருந்தது.

இப்படித் தாயார் கூறினார்.

பண்டாராவின் சகோதரியிடம் கேட்டபோது எனது அண்ணன் எப்படியும் வீடு வந்து சேருவார் என்ற நம்பிக்கையிலேயே நான் இருக்கிறேன் என்றார் அவர்.

### பிக்குகள்

அடுத்தபடியாக பௌத்த பிக்குகள் இருந்த மண்டபத்தை நோக்கிச் சென்றேன்.

உண்மையிலேயே இது யாழ்ப்பாணமா? அல்லது தென் இலங்கையா? எனக்கே சந்தேகம் ஏற்பட்டு விட்டது.

ஒரு பிக்குவைச் சுற்றி ஏனைய பத்திரிகையாளர்கள் கேள்வி மேல் கேள்வி போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தனர்.

அவர்தான் வவுனியா சமாதான ஒற்றுமைக் குழுத்தலைவர் சியம்பலகஸ்வெவ விமலசாரதேரர்.

இராணுவ நடவடிக்கையால் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என நான் ஏற்கனவே ஜனாதிபதிக்கு தெரிவித்து விட்டேன்.

வவுனியாவில் இருந்து தமிழர் பிரச்சினையை நன்கு அறிந்தவன் நான்.

தெற்கில் உள்ளவர்களுக்கு வடக்கில் என்ன நடக்கிறது என்பது தெரியாது ஆகவே தான் அவர்கள் அப்படிச் சொல்கிறார்கள்.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காண வேண்டும் என நான் மீண்டும் கூறுகிறேன்.

இப்படி அவர் கூறினார்.

சுபாஸ் விடுதியை விட்டு மாலை ஆறுமணி அளவில் புலிகளின் ஆயுத வாகனங்கள் முன் செல்ல பத்திரிகையாளர்கள், விஜே குழுவினர் புலிகளின் பழைய பூங்கா முகாம் நோக்கி விரைந்தனர்.

அங்கு தான் நெஞ்சை உருக்கும் சம்பவம் நிகழ்கிறது.

புலிகள் விஜே நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து பண்டாரவையும் அஜித்தையும் புலிகள் அழைத்து வருகின்றனர்.

இவர்கள் இருவரையும் இவர்களது குடும்பத்தவர்கள் ஆரத்தழுவி அழுது புலம்புகின்றனர்.

கமெராக்கள், கிளிக் கிளிக்என்று பளிச்சிடுகின்றன. திரும்பிப் பார்த்த கண்கள் எல்லாம் பனித்திருந்தன நான் மண்டபத்தை விட்டு வெளியேறும்வரை அழுது கொண்டே இருந்தார்கள். (இ-10)

## மனமகிழ்ச்சியாயிரு

'கர்த்தரிடத்தில் மன மகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்'
(சங் 37:4)

கர்த்தர் மிகவும் விரும்புவது உன்னுடைய மன மகிழ்ச்சி. விரும்பாதது உன்னுடைய முறுமுறுப்பு.

தாவீது ராஜா மேலே சொன்ன வசனத்தில்ஒரு பெரிய இரகசியத்தை

**ஞானக்கதிர்**

அறிவிக்கிறார். கர்த்தரிடத்தில் மன மகிழ்ச்சியாயிரு, அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை எல்லாம் உனக்கு நிச்சயமாகவே கொடுப்பார்.

உனது மனமகிழ்ச்சி உனது விசுவாசத்தைக் காட்டுகிறது உன் மனமகிழ்ச்சி உன் உள்ளத்தில் துதியை வெளிப்படுத்துகிறது. உன் மனமகிழ்ச்சி உன் பாரத்தையெல்லாம் கர்த்தரிடத்தில் ஒப்புக் கொடுத்து விட்டாய் என்பதைத் தெரிவிக்கிறது.

உனக்கு ஒரு பிரச்சினையிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். உதாரணமாக உன் கணவனோ பிள்ளைகளோ இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறாய். உடனே அதற்காக ஊக்கமாய் மன்றாடி ஜெபி. உன் உள்ளத்தில் கர்த்தர் இரட்சிப்பார் என்ற விசுவாசம் வரும்வரை தொடர்ந்து ஜெபி

ஜெபித்தபின் மன மகிழ்ச்சியோடு கர்த்தரை ஸ்தோத்தரிக்க ஆரம்பித்து விடு. ஆண்டவரே என் கணவனை, பிள்ளைகளை பரிசுத்தவான்களாக மாற்றப் போகிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம் என்று முகமலர்ச்சியோடு, சிரித்த முகத்தோடு கர்த்தரை ஸ்தோத்திரி. மிகவும் விரைவாக கர்த்தர் அற்புதத்தைச் செய்வார்.

ஒரு போதும் முறுமுறுப்போடு கர்த்தரிடம் பேரம் பேசாதே! என் கணவனை இரட்சிக்கா விட்டால் நான் ஆலயத்திற்குச் செல்ல மாட்டேன் என்று நிபந்தனை விதிக்காதே! ஆறு மாதத்



திற்குள் இரட்சிக்காவிட்டால் என்று நாள் கெடுவும் வைக்காதே! கர்த்தர் செய்யப்போகும் நன்மைகளை விசுவாசித்து மனமகிழ்ச்சியாயிரு. கர்த்தர் உன் ஜெபத்தைக் கேட்டு உன்னில் மகிழ்ச்சியாயிருப்பார்.

**பொய்யாமொழி**

**குறள்:**

கொல்லாமை மேற்கொண்டொழுகுவான் வாழ்நாள் மேல்.
செல்லாது உயிருண்ணுங் கூற்று.

**பொருள்:**

கொல்லாத அறத்தை மேற்கொண்டு நடப்பவனுடைய வாழ்நாளின் மேல் உயிரைக் கொண்டு செல்லும் கூற்றுவனும் செல்ல மாட்டான்.



### கர்மாரம்பம் இன்று

யாழ்ப்பாணம், டிச. 7

ஆனைக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ ஆலடி ஞானவைரவர் ஆலய புனருத்தாரண பிரதிஷ்டா மகாகும்பாபிஷேக கர்மாரம்பம் இன்று (7-12-86) விநாயக வழிபாட்டுடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் புதன் கிழமை காலை தனுலக்ன முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

ஆனைக்கோட்டை சிவஸ்ரீ க. குகதாசக் குருக்கள் கும்பாபிஷேகத்தினை நடத்திவைப்பர். (இ-27)

### திரிபுராவில் வேலை நிறுத்தம்

அஹர்தலா, டிச 6

திரிபுராவில் 13 பழங்குடியினர் தீவிரவாதிகளினால் கட்டுக் கொலை செய்யப்பட்டதை ஆட்சேபித்து 24 மணிநேர பொது வேலை நிறுத்தம் நடத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

I. D. P. M. Parts I & II
A. A. T. All Stages
I. A. B. All Stages
Commencement: 6-12-86
If you can find a better Course joint it.
**Cantabia Institute**
(shoot of Oxonia, Colombo.)
21, Main Street, Jaffna.
T'Phone: 24201

# உதயன்

07-12-1986 ஞாயிற்றுக்கிழமை

I C M A (New Syllabus)
Stage - I Rs. 800-00
Stage - II Rs 1000-00
(All subject will be taught)
Commencement: 6-12-86
Dedicated lectures Safe place
Reasonable fees
Join the leaders
**Cantabia Institute**
(shoot of Oxonia, Colombo.)
21, Main Street. Jaffna.
T'Phone: 24201

# பாதயாத்திரிகர் மீது இரவில் தாக்குதல்!

## மட்டுவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிச. 6
மட்டுவில் மகாவித்தியாலயத்தில் தங்கி இருந்த யாழ். பல்கலைக்கழக பாதயாத்திரிகள் மீது வெள்ளிக்கிழமை இரவு 11 மணி அளவில் இனந் தெரியாதோர் தாக்குதல் நடத்தினர்.

இதன் காரணமாக பாதயாத்திரிகர்கள் சிலர் காயம் அடைந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

பாடசாலைச் சொத்துக்களும் யாத்திரிகர்களின் உடைமைகளும் ஒலிபெருக்கிச்சாதனங்களும் சூறையாடப் பட்டன.

சம்பவதினம் இரவு 11 மணி அளவில் கைத்துப்பாக்கிகள், கிறனேட்டுகள் சகிதம் உட்பிரவேசித்த சிலர் மின்சார விளக்குகளை அடித்து நொருக்கிவிட்டு தாக்குதல் நடத்தினர் என்று தெரியவருகிறது.

தலைகளிலும் முகங்களிலும், முதுகிலும், பலவித காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் கிடந்த யாத்திரிகர்கள் நேற்று பொதுமக்களின் உதவியுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இது சம்பந்தமான மக்களிடம் முறையிடுவதற்கான கண்டனப் பொதுக்கூட்டம் ஒன்று இன்று மட்டுவில் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என அமைப்புக் குழு அறிவித்துள்ளது.

எனினும் கோப்பாய், தீவுப்பகுதி பாதயாத்திரைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

(இ-10)

## பஸ் விபத்தில் 16 பேர் பலி

சென்னை டிச 6
தமிழ் நாட்டில் சென்னையருகே இன்று நிகழ்ந்த பஸ்விபத்தொன்றில் 16 பேர் இறந்தனர். 21 பேர் காயமடைந்தனர்.

சிங்கப் பெருமாள் கோவில் பகுதியில் அரசிற்குச் சொந்தமான பஸ் ஒன்று டிரக்வண்டியுடன் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது.

(ஒ)

## தீவுப்பகுதியிலும் பரீட்சை சுமுகம்

யாழ்ப்பாணம், டிச. 7
தீவுப்பகுதியில் ஜீ. சி. ஈ. சாதாரண தர பொதுப்பரீட்சை சுமுகமாக நடைபெற்று வருகிறது.

புங்குடுதீவு வட்டாரக் கல்வி அதிகாரி, தீவுப் பகுதிக்கான இணைப்பதிகாரியாக கடமைபுரிகின்றார்.

சகல பரீட்சை மண்டபங்களுக்கும் விடுதலைப் புலிகள் கண்காணிப்புப் பாதுகாப்பு வழங்கியுள்ளனர்.

(அ-5)

## இரண்டாவது

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
இல் இருக்கும் மட்டக்களப்பு இரண்டாவது எம். பி ஜனூப் ரிஸ்வி சின்னலெப்பையின் வீடும் தாக்கப்பட்டது. அந்த நேரம் அவர் வீட்டில் இல்லை

வீட்டில் அப்போது இருந்த அவரின் தந்தையான முன்னாள் எம். பி. ஜனூப் லத்தீப் சின்ன லெப்பை மயிரிழையில் உயிர்தப்பினர்.

## முடிவு திகதி 20-12-86

அமரர் சவிரிமுத்து செபஸ்தியாம்பிள்ளை ஞாபகார்த்தமாக றெக்கிளமேசன் சனசமூக நிலையம் நடாத்தும் பொது அறிவுப்போட்டி முடிவு திகதி 20-12 86 ஆம் திகதி ஆகும்.

06-12-86 ஆம் திகதிய சஞ்சீவியில் வெளியாகியதுபோல 30-12-86 அல்ல. அச்சுப்பிழை நேர்ந்துவிட்டது.

**தேவை**

பலசரக்குக் கடைக்கு விற்பனை உதவி ஆள் பழகியவர் அல்லது தொழில் பழகவுள்ளவர் தேவை. ஸ்ரீ நளாயினி ஸ்ரோர், காங்கேசன் துறை வீதி, கொக்குவில்.

**விண்ணப்பப் படிவம்**

NCE. ஆங்கிலப் பரீட்சைக்கான படிவம் விற்பனையாகிறது முடிவு திகதி 19-12-1986 நாயக பாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.



நேற்று கச்சேரி [பழைய பூங்காவில்] [உள்ள] புலிகளின் முகாமுக்கு விஜே குழுவினர் வந்தபொழுது எடுக்கப்பட்ட படம். வலது புறத்தில் பிக்குமாருக்கு தலைமை வகித்து வந்த அமரபுர கல்யாணவன்ச நிகாய மகாநாயக்க தேரர் வண. பட்டபொல அனோமதாஸியையும் இடது புறத்தில் விஜேயையும் மத்தியில் கிட்டு, ரஹீம் ஆகியோரையும் காணலாம்.

# அடுத்த விஜயத்தின்போது ஆயிரம் பேருடன் வருவேன்

யாழ்ப்பாணம், டிச. 7
நான் தொடர்ந்தும் யாழ்ப்பாணம் வருவேன்; இம்முறை நூறுபேருடன் வந்தேன். அடுத்த தட்டவை ஆயிரம் பேருடன் வருவேன்

நேற்று நடந்த கிட்டு - விஜே பேச்சுவார்த்தை முடிந்த பின்னர் எமது செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் திரு. விஜயகுமாரண துங்கா இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொடரவிருக்கும் எனது விஜயங்களின் மூலம் சிங்கள தமிழ் மக்களிடையே புரிந்துணர்வு வளர்ந்து அதன் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படலாம் என நம்புகிறேன்.

இரு சமூகங்களினதும் உழைக்கும் வர்க்கத்தினரின் தலைமையில் அமையும் சோஷலிச அமைப்பிலேயே முழுமையான தீர்வு ஏற்படும்.

தமிழ் இளைஞர்கள் மட்டுமல்ல பல சிங்கள இளைஞர்களும் சிறைகளில் உள்ளனர் இவர்கள் இருசாராருக்கும் விடுதலை பெற்றுத்தரவே எமது கட்சி இன்று அரசுடன் போராடி வருகிறது.

அரசு புலிகளிடம் 19 போராளிகளின் பெயர்ப் பட்டியலைக் கொடுத்துள்ளது; இதிலிருந்து சிறையிலுள்ள மிகுதியான ஆயிரக்கணக்கானவர்களும் அப்பாவிப் பொதுமக்கள் என்பது தெரிகிறது

சிங்கள மக்களும் ஓரளவு இவற்றைப் புரிந்து கொள்கிறார்கள்.

இவ்வாறு திரு குமாரணதுங்கா தெரிவித்தார்

(அ-5-10)

## மட்டக்களப்பில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
. பஸ், மட்டக்களப்பில் பயணிகளை இறக்கிவிட்டு, கல்முனை நோக்கிச் சென்ற போதே இச் சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளோரின் பெயர்கள் வருமாறு;

1. மகேஸ்வரி, வயது 40
2. லீலா, 17 வயது (மகள்) அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர்கள்
3. ஜெகதீஸ்வரன், 24 வயது, துறைநீலாவணை.
4. இராஜதுரை, 47 வயது பஸ் சாரதி
5. திவாகர், 19 வயது, மட்டக்களப்பு

உயிரிழந்தவர்களின் பெயர்கள் வருமாறு:-

1. இரத்தினசிங்கம், வயது 23, கண்டக்டர்.
2. மகேந்திரன், வயது 23, கல்லாறு.

ஏனைய இரண்டு பேரின் சடலங்களும் அடையாளங் காணப்படவில்லை.

(அ-எ-21)

## நேற்றைய---

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
நேர ரகசியப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

எனினும் எந்தவிதமான இணக்கமும் ஏற்படவில்லை.

இதனை அடுத்து மக்கள் கட்சி உறுப்பினர்களும், பௌத்த மதகுருமார்களும், ஏனையோரும் புலிகளின் பயிற்சி முகாம்களை சுற்றி பார்வையிட்டனர்.

கொழும்பு பத்திரிகையாளர் மாநாடும் நேற்று புலிகளின் பாசறையில் நடத்தப்பட்டது.

பின்னர் ஒரு மணி அளவில் அனைவரும் சுபாஸ் ஹோட்டலை வந்து சேர்ந்தனர்.

(இ-5-10)

# கடற்படையினர் கடத்தல் படகை கைப்பற்றினார்கள்

யாழ்ப்பாணம், டிச. 7
இந்தியா சென்ற கடத்தல் படகொன்று கடற்படையினரால் பொருள்களுடன் கைப்பற்றப்பட்டது.

காரைநகர் கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் ரோந்து செல்கையில்; இந்தியா சென்றுகொண்டிருந்த இந்தப் படகை கண்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

கள்ளக் கடத்தல்காரர் படகை புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவிலுக்கு அருகில் கைவிட்டு ஓடிவிட்டனர்.

கடற்படையினர் படகையும்; அதிலிருந்த டெக், டோர்ச்லைற் போன்ற பொருள்களையும் கைப்பற்றினர்.

(அ-5)

## அழுது கொண்டிருந்தார் சிப்பாய் பண்டார

யாழ்ப்பாணம், டிச. 7
பழைய பூங்காவில் நேற்றைய சந்திப்புக்கள் முடிந்து, அனைவரும் வெளியேறிக் கொண்டிருந்தனர். அப்போது பிடிபட்ட சிப்பாய்களில் ஒருவரான பண்டார அழுது கொண்டிருந்தார்.

இதனைக்கண்ட போராளி ஒருவர் அவரைத் தேற்றி ஆறுதல் கூறி அழைத்துச் சென்றார்

(இ-5-10)



புலிகளின் கச்சேரி பழைய பூங்கா முகாமுக்கு திரு. விஜயகுமாரணதுங்க வருகை தந்தபோது கிட்டு கைலாகு கொடுத்து வரவேற்பதை முதல் படத்திலும், ரஹீம் கைலாகு கொடுத்து வரவேற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (இ)

## பிக்குகளும்..

(1ஆம் பக்கத் தொடர்)
காணப்பட்டனர்.

விஜே வெள்ளைப் பூப்போட்ட வெள்ளைச் சேட்டை மணிக்கட்டு வரை மடித்துவிட்டு சினிமா நடிகரின் கம்பீரத்துடன் நின்றார்.

கிட்டு, விஜே, தேரோக்கள் உரையாற்றியதைத் தொடர்ந்து இரு கைதிகளும் பெற்றோருடன் உரையாட அனுமதிக்கப் பட்டனர்.

11 மணி அளவில் பிக்குகளால் பிரித் வைபவம் நடத்தப்பட்டது.

இதன் பின் கிட்டு, விஜே ரகசிய பேச்சு நடத்தினர்.

அதைத் தொடர்ந்து கிட்டு கைதிகளின் பெற்றோரிடம் உரையாடி அவர்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் அளித்தார்

தொடர்ந்து புலிகளின் இராணுவ பயிற்சிகளை விஜே குழுவினர் சென்று பார்வையிட்டனர்.

பலரும் கிட்டுவோடு நின்று படம் எடுத்துக் கொண்டனர்.

கொழும்பு பத்திரிகையாளருக்கு பேட்டி அளித்ததைத் தொடர்ந்து நேற்றைய நிகழ்ச்சிகளை கிட்டு முடித்துக் கொண்டார்.

விஜே குழுவினர் புறப்பட்டுச்செல்லும் போது பெரும் எண்ணிக்கையான மக்கள் ஜெய் கோஷம் எழுப்பி வாழ்த்துக்கூறி வழியனுப்பி வைத்தனர். (இ-5-10)

## அம்பாறையிலும் ஊரடங்கு

அம்பாறை, டிச. 7
அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை ஆகிய கிராமங்களில் நேற்றுமாலை 6மணி தொடக்கம் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்தது.

இன்று மாலை 6மணியுடன் ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் என்று பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் நேற்று அறிவித்தனர்.

கலவரம் ஏற்படாமல் தடுக்கும் முன்னேற்பாடாகவே அம்பாறை மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் கொண்டு வரப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

நினைவில் வைத்திருங்கள்!

R.S.R.
**GREEN PEKING PALACE**

அன்பான உபசரிப்புடன்
அனுபவம் மிக்கவர்களால்
தயாரிக்கப்படும்

Chines உணவுகள், Buriyani,
Short - eats, Ex.Lunch
and Ice-Creams

இவைகளைக் குறைந்த விலையில்
தருபவர்கள்

யாழ். 4-ம் குறுக்குத் தெருவில்
(குருநகர் சந்தை முன்பாக)

**GREEN PEKING PALACE**
ஸ்தாபனத்தார்

Also,
உங்கள் திருமண வைபவங்கள் மற்றும் பிரியாவிடை விருந்துபசாரங்களை நவீன பாணியில் உங்கள் விருப்பங்களுக்கு அமைய உங்கள் வீடுகளுக்கே உணவுகளைக் கொண்டு வந்து தரும் ஒரே ஸ்தாபனம்,

**GREEN PEKING PALACE**

இதோ! வெளிவந்துவிட்டது!

ஹப்பி அளிக்கும்
ஜோ. எகட்டனின் தயாரிப்பில்
16 முத்தான
**கிறிஸ்மஸ் பாடல்கள்**
**அடங்கிய கஸட்**
(PRE RECORDED CASSTTESS)
உங்கள் முத்துக் குவியல்களைத் தெரிவு செய்திட முந்துங்கள்!
விலை ரூபா 35/- மட்டுமே!

நாடுங்கள்:
சண்முகம் ட்ரேட்ஸ்
பிரதான வீதி,
(சின்னக்கடை சந்தி)
யாழ்ப்பாணம்.

Zenith Ads.

இதோ! வெளிவந்துவிட்டது!

ஹப்பி அளிக்கும்
ஜோ. எகட்டனின் தயாரிப்பில்
16 முத்தான
**கிறிஸ்மஸ் பாடல்கள்**
**அடங்கிய கஸட்**
(PRE RECORDED CASSTTESS)
உங்கள் முத்துக் குவியல்களைத் தெரிவு செய்திட முந்துங்கள்
விலை 35/- ரூபா மட்டுமே!

நாடுங்கள்:
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்
19/3, கொழும்புத்துறை வீதி,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

Zenith A's.

இலங்கைப் பல்கலைக் கழகங்களின்

**வெளிவாரிப் பட்டமாணிப் பரீட்சைகள்**

கல்வியாண்டு 1987 / 88

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவை கருதி
வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள் (2ஆவது பிரிவு)

**ஜனவரி மாதம் 5ஆம் திகதி (05-01-1987) ஆரம்பமாகின்றன.**

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

கலைமாணி (B. A,) விஞ்ஞானமாணி (B Sc.) வர்த்தகமாணி (B. Com.)
(கணிதம்)

✶ 3 வருடங்களில் B A., B. Sc. பட்டதாரியாகலாம் ✶ 4 வருடங்களில் B. Com. பட்டதாரியாகலாம்
(பட்டதாரிகளானால் உடனடி வேலை வாய்ப்புக்கள்)

விண்ணப்பங்கள் டிசம்பர் 30ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களையும், விவரத்திரட்டினையும் பெற "பதிவாளர், அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்" என்ற பெயருக்கு ரூபா 10இற்கான காசுக் கட்டளையுடன் 9" x 4" அளவுடைய சுய முகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர், **ASTAN INSTITUTE**
166/1, HOSPITAL ROAD, JAFFNA.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம், 1ஆம் மாடி.)
Branch: 101/1, STANLEY ROAD, JAFFNA.
(மக்கள் வங்கிக்கருகாலமயில்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 07-12-1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15 Second Lane Power House Road JAFFNA. Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60 N 86. T'PhoneNo. 24805, 23078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org